**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 107/2014**

**Deposition of Witness for : PW 11**

**Name** : திரு. கோவிந்தராஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17-11-2022.**

முதல் விசாரணை -

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும் என் ஊர்க்காரர். எதிரிகள் மூவரையும் தெரியும். வழக்கைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பு எதிரி சுந்தரமூர்த்தி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை, அதன் பேரில் எந்த பொருளையும் கைப்பற்றப்படவில்லை. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையது தான், அந்த கையெழுத்தை தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பமும் என்னுடையது தான். அந்த கையெழுத்தையும் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

26.4.2013 அன்று போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், 26.4.2013 அன்று தண்ணீர்பந்தல் - கீழ்வணக்கம்பாடி ரோடில் வேடியப்பன் கோயில் அருகே நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த செல்வ பாண்டியன் ஆகியோர் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்த போது தண்டராம்பட்டு காவல் ஆய்வாளர், தண்டாம்பட்டு காவல் நிலைய குற்ற எண் 120/2013 வழக்கு சம்மந்தமாக 1ம் எதிரி சுந்தரமூர்த்தியை மதியம் சுமார் 2.15 மணிக்கு கைது செய்து விசாரித்த போது அவர் எந்த வித வற்புறுத்தலும் இன்று தாமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் ஆய்வாளர் மாலை 4.30 மணியளவில் 1ம் எதிரியை அழைத்துச் சென்று கீழ்சிறுப்பாகம் பெரிய ஏரி மேடு பக்கத்தில்

உள்ள பெரிய பாறை அருகே இருந்த கூரிய கத்தி சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காப்பி கலர் அரைக்கை சட்டை, வெள்ளை கலர் பெர்முடாஸ் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனை ஆய்வாளர் மகஜர் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும் செல்வபாண்டியனும் கையெழுத்து போட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது.

ஒம்/- கோவிந்தராஜ்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 107/2014</u>**

**<u>Deposition of Witness for : PW 12</u>**

**Name** : திரு. வேலு

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17-11-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பெயிண்ட் வேலை செய்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும் அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரிகளை தெரியும், ஒரே ஊர்க்காரர்கள் தான். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 6 - 7 வருடங்களுக்கு முன்பு போலீசார் என்னிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 4 சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5. அந்த மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் என்னை விசாரித்ததாகவும், போலீசார் விசாரணையில் கடந்த 26.4.2013 ந் தேதி காலை 6 மணிக்கு எங்கள் ஊரான கீழ்சிறுப்பாக்கம் கிராமம், முருகன் கோயில் தெருவில் வீராசாமி வீட்டின் அருகே நானும், பாண்டியன் என்பவரும் பாபு கொலை பற்றி பேசிக்கொண்டு இருந்தோம் என்றும், அப்போது போலீசார் அங்கு வந்து தண்டராம்பட்டு காவல் நிலைய குற்ற எண் 120/2013 வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ய எங்கள் சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள் என்றும், போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், பாண்டியனும் கையெழுத்து இட்டோம் என்றும், மேலும் ஆய்வாளர் சம்பவ இடத்தில் ரத்தக்கரை படிந்த காரை துண்டுகள் நான்கையும், ரத்தக்கரைபடியாத காரை துண்டுகள் நான்கையும் எடுத்தார் என்றும், பின்னர் 4 அடி தூரத்தில் ரத்தக் கரை படிந்த மண் மற்றும்

ரத்தக்கரை படியாத மண் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த மகஜரில் நானும், பாண்டியனும் கையெழுத்து இட்டோம் என்று விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

பார்வை மகஜா் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது.

ஒம்/- வேலு

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.